அசல்வழக்கு எண். 5/2023

நாள் : 21.01.2025

வா.சா. : 1

பெயர் : பாலமுருகன்

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

தாவா சொத்து பிரதிவாதிக்கு சொந்தமானது என்றால் சரி. 11.03.2014 அன்று மேற்படி சொத்தை அடமானம் எழுதிக்கொடுத்தார் என்றால் சரி. அந்த அடமானம் பதிவு செய்யப்பட்ட அடமானம் என்றால் சரி. வழக்கில் 24% வட்டி கோரியுள்ளேன் என்றால் சரி. 12% வட்டிதான் கோர முடியும் என்றாலும் 24% வட்டி கோரியுள்ளது சட்ட முரணானது என்றால் சரியல்ல. பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையை படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன் அதை மறுத்து Reply statement தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. எதிர்வழக்குரையில் கண்டுள்ள விவரங்கள் தவறு என்று முதல் விசாரணையில் மறுக்கவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி தனது எதிர்வழக்குரையில் அசல் 4 லட்சமும் வட்டியாக 1,91,000/- மற்றும் நீதிமன்றக்கட்டணம் 31,500/- ஆகக்கூடுதல் 6,27,500/-மட்டுமே தான் தரவேண்டுமென்று சொல்லியுள்ளார் என்றாலும் இது சம்பந்தமாக மறுப்புரை எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. இது சம்பந்தமாக நான் மறுக்காத நிலையில் அதை நான் ஒப்புக்கொண்டதாக அர்த்தம் என்றால் சரியல்ல. பிரதிவாதி எந்நதெந்த தேதியில் வட்டி கொடுத்தார் என்ற கணக்கு பட்டியல் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. பிரதிவாதி எனக்கு 6,27,500/-மட்டுமே தான் தரவேண்டும் என்றாலும் அதனால் நான் கோரியுள்ள 10,47,506/- ரூபாய் கொடுக்கவேண்டியதில்லை என்றால் சரியல்ல.

(signature)

என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு என்னால் தட்டச்சருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

(signature) 21/1/25

மாவட்ட நீதிபதி

மயிலாடுதுறை

(signature) 21-1-25.